கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கொடைக்கானல் மேல்மலை ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கோட்டை பகுதி,
சேலம் மத்திய மாவட்டம்



திமிரி மேற்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



வெம்பாக்கம் மத்திய ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



சேரன்மகாதேவி மேற்கு ஒன்றியம்
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.

## ரூ.870 கோடி மதிப்பீட்டில்

# நவீன வசதிகளுடன் கட்டப்பட இருக்கும் ‘பிராட்வே’ பேருந்து நிலையம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, செப்.10-

ரூ. 870 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட இருக்கும் பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் வள்ளலார் நகர் பேருந்து நிலையத்திற்கு மாற்று இடமாக, தற்காலிக பேருந்து நிலையங்களில் பொதுமக்கள் மற்றும் பயணிகளுக்கு சிரமம் ஏற்படாமல் இருக்க அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

நேற்று (9.9.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் 5வது மண்டல அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் தங்கசாலை வள்ளலார் நகர் பேருந்து நிலையங்களில் கட்டுமான பணிகள் நடைபெறுவதால் தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து எம்டிசி பேருந்துகள் இயக்குவது தொடர்பாகவும், பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் வழங்குவது தொடர்பாகவும் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு தங்கசாலை வள்ளலார் நகர் பேருந்து நிலையம் பணிகள் துவங்கவுள்ளதால், தற்காலிக பேருந்து நிலையத்திற்கான மாற்று இடங்களை தேர்வு செய்ய அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :-

75 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில் இருந்த பிராட்வே பேருந்து நிலையத்தை முதல்வர் அவர்கள், தொகுதி சார்ந்த தேர்தல் வாக்குறுதிகளின் ஒரு பகுதியாக, மல்டிலெவல் கார் பார்க்கிங்காக மாற்றுவோம் என உறுதி அளித்திருந்தார். யாரும் எதிர்பார்க்க முடியாத வகையில், ரூ. 870 கோடி மதிப்பீட்டில், பிராட்வே பேருந்து நிலையம் அனைத்து நவீன வசதிகளுடனும் புதுப்பிக்கப்பட இருக்கிறது.

பிராட்வே பேருந்து நிலையத்தில் இருந்த கட்டிடங்கள் தற்போது இடிக்கப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு 800க்கும் மேற்பட்ட பயணிகள் பயணிக்கும் இந்தப் பேருந்து நிலையத்தில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் பயணிகள் சௌகரியமாக பயணிக்க இரண்டு இடங்களில் - தற்காலிக பேருந்து நிலையங்களாக இராயபுரம் கிளைவ் பேக்டரி அருகிலுள்ள இடத்திலும் மற்றும் தீவுத்திடல் என இரண்டு இடங்களிலிருந்து பேருந்துகளை இயக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், வள்ளலார் பேருந்து நிலையமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட இருக்கிறது. அங்கே தினசரி சுமார் 400 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்த பேருந்து நிலையத்தின் பணிகள் தொடங்கும் போது, பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படாமல் இருக்க, மாநகராட்சி 5வது மண்டல அலுவலகம் எதிரில் உள்ள 1 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடம் மற்றும் டான்சிக்கு சொந்தமான 1.50 ஏக்கர் பரப்பளவில் உள்ள மற்றொரு இடம், இரண்டு பிரிவு களாகப் பிரித்து அந்த இடங்களில் பேருந்துகளை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில், மேயர் அவர்களும், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, மாநகராட்சி ஆணையாளர் குமரகுருபரன், சிஎம்டிஏ உறுப்பினர் செயலாளர் பிரகாஷ், எம்டிசி மேலாண்மை இயக்குநர் பிரபு சங்கர், துணை ஆணையாளர் (பணிகள்) சிவகிருஷ்ணமூர்த்தி, ஆர்டிசி ரவி, போக்குவரத்து துறை, காவல் துறை, நீர்வளத் துறை, பொதுப்பணித் துறை, சிஎம்டிஏ, மாநகராட்சி, சென்னை குடிநீர், மின்சாரத் துறை மற்றும் சுற்றுலாத் துறை அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த தற்காலிக பேருந்து நிலையங்கள் ஒரு மாத காலத்திற்குள் தொடங்க, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் விரைவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தேவையான அனைத்து சிறப்பம்சங்களைச் சேர்ப்பதற்கான உத்தரவை பெற்று, அவர்கள் அறிவுரையின் பேரில் இந்தப் பணிகள் தொடங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர். பிரியா, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நகரமைப்பு குழுத்தலைவர் இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர்மகாவிஷ்ணு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் தொகுதி முத்துக்கொண்டாபுரம் கிராமத்தில் காவேரி ராசபுரம், கனகம்மாசத்திரம் மற்றும் முத்துக்கொண்டாபுரம், இராமாபுரம் ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது. இம் முகாமில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பங்கேற்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களிடத்தில் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் திருவாலங்காடு மேற்கு ஒன்றிய செயலாளர் கூளூர் எம். இராஜேந்திரன், கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, ஒன்றிய கழக நிர்வாகிகள் காஞ்சிப்பாடி பி. சரவணன், லக்ஷ்மாபுரம் வேலன், ஜி. ரமேஷ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் காஞ்சிப்பாடி ஆர். யுவராஜ், துணை அமைப்பாளர்கள் எஸ். திலகன், சுரேஷ் பாபு, கிளை செயலாளர்கள் தட்சிணாமூர்த்தி, இரங்கநாதன், ஆறுமுகம், செல்வம், யுவராஜ், தளபதி, சதீஷ் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

## 6,501 நபர்களுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கிடவும் –

## அம்பேத்கர் சிலையை திறந்து வைக்கவும் இன்று மாலை வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு குன்றத்தூரில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்–அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, செப்.10-

6,501 குடும்பங்களுக்கு ரூ.279 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்களை வழங்கிடவும் - அம்பேத்கர் சிலையை திறந்து வைக்கவும் இன்று 10-ஆம் தேதி மாலை குன்றத்தூருக்கு வருகை தரும் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு குன்றத்தூர் 400 அடி சாலை மேம்பாலம் அருகே தெற்கு மலையம்பாக்கம் - செம்பரம்பாக்கம் ஏரிக்கு செல்லும் சாலை சந்திப்பில் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூர், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 6,501 குடும்பங்களுக்கு ரூ.279 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்கள் வழங்கும் விழா இன்று 10-ஆம் தேதி மாலை 5.00 மணியளவில் குன்றத்தூரில் உள்ள சேக்கிழார் அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெறுகிறது.

குன்றத்தூர் நகராட்சி சார்பில், குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டுள்ள அண்ணல் அம்பேத்கர் முழு உருவ வெண்கலச் சிலை திறப்பு விழா இன்று மாலை 6.00 மணியளவில் நடைபெறுகிறது.

கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு 6,501 குடும்பங்களுக்கு ரூ.279 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்களை வழங்குகிறார். அண்ணல் அம்பேத்கர் சிலையையும் திறந்து வைக்கிறார்.

இந்த இரு விழாக்களிலும் பங்கேற்க வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு குன்றத்தூர் 400 அடி சாலை மேம்பாலம் அருகே தெற்கு மலையம்பாக்கம் - செம்பரம்பாக்கம் ஏரிக்கு செல்லும் சாலை சந்திப்பில் இன்று 10-ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேள-தாளம்-பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

எனவே, இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் மற்றும் இளைஞர் அணியினர் அலைகடலென திரண்டு வந்து தமது கரங்களில் கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியேந்தி மகிழ்ச்சியுடன் பெரும் கூட்டமாக திரண்டு நின்று வரவேற்பு அளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்
## செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வார்டு, கிளை, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 10.09.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில், கலைஞர் விளையாட்டுத் திடல், மறைமலைநகரில் நடைபெறவுள்ளது. செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 09-09-2025

கலைஞர் 100 1924 - 2023

